Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 66

சனிக்கிழமை
31 ஜனவரி 2026

தை 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

சுகாதாரச் சீர்கேடு

## பல்பொருள் அங்காடிக்கு 72,000 ரூபா தண்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 31
பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில், சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கிய பல்பொருள் »11

## கிவுல் ஓயாவை எதிர்க்க ஓரணியில் திரளுங்கள்!

ரவிகரன் எம்.பி அழைப்பு



வவுனியா, ஜனவரி 31
தமிழர்களின் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கில், மகாவலி அதிகாரசபையால் முன்னெடுக்கப்படும் கிவுல் ஓயா திட்டத்தை எதிர்த்து, நாளைமறுதினம் இடம்பெறும் போராட்டத்தில் மக்கள் எழுச்சியுடன் கலந்துகொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அழைப்பு விடுத்துள்ளார். »11

## கணக்காய்வாளர் நியமனம் இன்று இறுதித் தீர்மானம்?



கொழும்பு, ஜன. 31
அரசியலமைப்பு பேரவை இன்று கூடவுள்ள நிலையில், புதிய கணக்காய்வாளர் நாயகம் நியமனம் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படலாம் என அரசியலமைப்பு பேரவை உறுப்பினரான அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.
புதிய கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு ஜனாதிபதியால் நான்கு தடவைகள் அனுப்பட்ட பரிந்துரை »11

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக

## அதிகாரி மீது தாக்குதல்; பணியாளர்கள் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அதிகாரி ஒருவர் தாக்கப்பட்டதைக் கண்டித்து பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் காணிவெளிக் »11

## வன உயிரிகள் திணைக்களத்துக்கு 5,000 சிவில் பாதுகாப்புப் படையினர்

விரிவு பக்கம்:-03



வல்வெட்டித்துறையில்

# தலைவர் பிரபாகரனின் வீட்டை மீளமைப்பதே பொருத்தமானது!

ஆதன உரிமையாளருக்கு பரிந்துரைக்க
வல்வெட்டித்துறை நகரசபை முடிவு

**யாழ்ப்பாணம், ஜனவரி 30**

**விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இல்லம் அமைந்திருந்த காணியில், புதிய கட்டுமானங்களை அமைக்காமல் இருப்பதே நல்லது என்றும், மாறாக கட்டுமானங்களை அமைப்பதாயின் பிரபாகரன் வாழ்ந்த இல்லத்தின் மாதிரியில் அதை அமைப்பதே பொருத்தம் எனவும், காணியின் உரிமையாளரான தலைவர் பிரபாகரனின் சகோதரிக்கு அறிவுறுத்த வல்வெட்டித்துறை நகரசபை தீர்மானித்துள்ளது.** »11

## சங்கானை முகாமையும் விடுவிக்கக் கோரிக்கை!

பவானந்தாராஜா எம்.பி. தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 31
சங்கானையில் பொதுமக்களின் காணியில் அமைந்துள்ள இராணுவ முகாமையும் அகற்றிவிட்டு, அந்தக் காணியையும் விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும், வலி. மேற்கு அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சிறீ பவானந்த ராஜா தெரிவித் »11

அனுமதி இல்லாமல்

## யாழ்.பல்கலையின் இலச்சினையை பயன்படுத்தினால் சட்டநடவடிக்கை

பதிவாளர் காண்டீபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 30
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இலச்சினையை அனுமதி இல்லாமல் பயன்படுத்தும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. »11

## கல்வி மறுசீரமைப்புக் குழுவில் துணைவேந்தர் சிறிசற்குணராஜா!



யாழ்ப்பாணம், ஜன. 30
தரம் 6 பாடத்திட்டத்தை மறுசீரமைப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள நிபுணர்குழுவில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜாவும் உள்ளீர்க்கப்பட்டுள்ளார். »11




மருத்துவத் தவறால் சிறுமியின் கை துண்டிப்பு;

## புலனாய்வுத் திணைக்களத்திடம் வழக்கைப் பாரப்படுத்த நேரும்!

பொலிஸாருக்கு நீதிபதி காட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 31
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் காய்ச்சல் காரணமாக சேர்க்கப்பட்ட சிறுமிக்கு, மருத்துவத் தவறால் மணிக்கட்டுடன் கை அகற்றப்பட்ட வழக்கை, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு பாரப்படுத்த வேண்டிய நிலை ஏற்படலாம் என்று பொலிஸாரை யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் உசைன் கண்டித்துள்ளார்.
2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சாண்டில்யன் வைஷாலி என்ற சிறுமி காய்ச்சல் மற்றும் தோலில் ஏற்பட்ட தொற்றுக் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். »11

## வடக்கில் மணல் பற்றாக்குறை தீர்க்க நடவடிக்கைகள் தேவை

துறைசார் அதிகாரிகள் வலியுறுத்து

விரிவு பக்கம்:-02

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 30.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4332 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 21 27 78 79 |
| விசேட எழுத்து | U |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 30.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1399 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 22 25 43 49 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 30.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0358 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 5 4 7 8 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 30.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2438 |
| ஆங்கில எழுத்து | J |
| சுப்பர் இலக்கம் | 01 |
| வெற்றி இலக்கங்கள் | 15 30 53 76 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 30.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6090 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 5 8 5 8 1 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 30.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2120 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 17 27 30 37 |
| விசேட எழுத்து | W |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 30.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0206 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 31 56 60 |

# வடக்கில் மணல் பற்றாக்குறை; தீர்க்க நடவடிக்கை எடுங்கள்

## வடமாகாண இலங்கை தேசிய நிர்மாணச் சங்கக் கிளை வலியுறுத்து!

**யாழ்ப்பாணம், ஜன.31**

**வடமாகாணம் தற்போது கடுமையான மணல் பற்றாக்குறை என்ற மிகப் பெரிய நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றது என்று வடமாகாண இலங்கை தேசிய நிர்மாணச் சங்க கிளைத் தலைவர் ந.நந்தரூபன் தெரிவித்துள்ளார்.**

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

ஒரு அடிப்படைக் கட்டுமானப் பொருளான மணல் இன்று சட்டபூர்வமான வழிகளில் கிடைக்காத நிலைக்கும், தாங்கமுடியாத விலைக்கும் சென்றுள்ளது. அதேநேரத்தில், சட்டவிரோதசந்தைகளில் மணல் மிக உயர்ந்த விலைக்கு இலகுவாகக் கிடைக்கின்றது. இது ஒழுங்குமுறை, கண்காணிப்பு மற்றும் நிர்வாகத் தோல்விகளைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. பொறியியலாளர்களாக, பிராந்திய அபிவிருத்தியை நேரடியாக பாதிக்கும் பிரச்சினைகளில் தலைமைப் பொறுப்பு ஏற்க வேண்டியது எங்களின் கடமை என நாங்கள் நம்புகிறோம். அதன் அடிப்படையில் ஆளுநர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக வட மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒழுங்குபடுத்தப்பட்ட மணல் 'யார்டு'களை அமைக்கவேண்டும் என வலியுறுத்துகிறோம். தாமதமின்றி உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என அதிகாரிகளையும், கொள்கையமைப்பாளர்களையும், தொழில்முறை நிறுவனங்களையும் வலியுறுத்துகிறோம்-என்றுள்ளது. (எ-26)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 30.01.2026 | வெள்ளிக்கிழமை | 0798 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| X | 5 6 6 8 9 8 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 30.01.2026 | வெள்ளிக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3064 | C | 07 53 59 73 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 30.01.2026 | வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Z | 08 13 39 57 | 5225 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 30.01.2026 | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0894 | 16 38 43 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 30.01.2026 | வெள்ளிக்கிழமை | |
| மேஷம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| ♈ | 32 38 44 57 | 4776 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 30.01.2026 | வெள்ளிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| U | 34 | 04 06 13 36 | 2240 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 30.01.2026 | வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| S | 57 71 73 76 | 2890 |

## விசேட சுற்றிவளைப்புகளில் சிக்கிக்கொண்ட 800 சாரதிகள்

கொழும்பு, ஜன.31

போதைப்பொருள் பயன்படுத்தி வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கண்டறியும் விசேட சுற்றிவளைப்புகள் நாடளாவிய ரீதியில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் டப்ளியு.பி.ஜே. சேனாதீர தெரிவித்துள்ளார்.

பொலிஸ் ஊடகப் பிரிவில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்த விசேட சுற்றிவளைப்புகளில் இதுவரை 800க்கும் அதிகமான சாரதிகள் கண்டறியப்பட்டுள்ளனர். அண்மையில் பாணந்துறையில் தேசிய மருத்துவ நிறுவனம்,மேல்மாகாண போக்குவரத்து அதிகாரசபை மற்றும் பொலிஸார் இணைந்து விசேட சோதனைகளை மேற்கொண்டனர். 84 பேருந்து சாரதிகளிடம் சிறுநீர் மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. 3 சாரதிகள் போதைப்பொருள் பயன்படுத்தியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய சோதனைகள் மூலம் 14 நாள்களுக்குள் கஞ்சா, ஹெரோய்ன், ஐஸ் மற்றும் பாபுல் போன்ற போதைப்பொருள்களைப் பயன்படுத்தியவர்களை கண்டறியமுடியும். அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சட்ட மருத்துவ அதிகாரிகள் மற்றும் விசேட நிபுணர்கள் முன்னிலையிலேயே இந்தப் பரிசோதனைகள் இரண்டு முறை நடத்தப்படுகின்றன. இதுவரை முன்னெடுக்கப்பட்ட இவ்வாறான சோதனைகளில் 800க்கும் மேற்பட்ட சாரதிகள் போதைப்பொருள் பயன்படுத்திய குற்றச் சாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகமானோர் முச்சக்கரவண்டி மற்றும் பேருந்து சாரதிகளாவர். சாரதியின் நடத்தையில் சந்தேகம் இருப்பின் 1955 எனும் இலக்கத்துக்கோ அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கோ பயணிகள் அறிவிக்கமுடியும் என்றார். (எ-இ)

## ஆடைகள் ஏற்றுமதியில் கடந்த ஆண்டு வளர்ச்சி

கொழும்பு, ஜன.31

இலங்கையின் ஆடை ஏற்றுமதி கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்தில் கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளின் தேவை அதிகரிப்பே இதற்கு முக்கியமான காரணமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கூட்டு ஆடைச் சங்கங்களின் பேரவை வெளியிட்டுள்ள தரவுகளின்படி, ஏனைய நாடுகளுக்கான ஏற்றுமதி வீழ்ச்சியடைந்த போதிலும், இந்த மூன்று பிரதான சந்தைகளும் அந்த இழப்பை ஈடுசெய்து ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதிப்படுத்தியுள்ளன என்று குறிப்பிட்டுள்ளது.

2024ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துடன் ஒப்பிடும்போது கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் அமெரிக்காவுக்கான ஏற்றுமதி 6.49 வீதத்தால் அதிகரித்து 178.29 மில்லியன் டொலராக உயர்ந்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதியானது 6.76 வீதத்தால் அதிகரித்து 141 மில்லியன் டொலராகப் பதிவாகியுள்ளது. பிரிட்டனுக்கான ஏற்றுமதியானது 12.95 வீதம் எனும் வளர்ச்சியுடன் 55.12 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது. ஏனைய சந்தைகளுக்கான ஆடை ஏற்றுமதியானது இந்தக் காலப்பகுதியில் 4.06 வீதத்தால் குறைந்து 72.8 மில்லியன் டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது. 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையிலான முழு ஆண்டில், மொத்த ஆடை மற்றும் துணி ஏற்றுமதி 5.02 பில்லியன் டொலராகப் பதிவாகியுள்ளது. 2024 ஆம் ஆண்டுடன் (4.76 பில்லியன் டொலர்) ஒப்பிடும்போது இது 5.42 வீத (258.18 மில்லியன் டொலர்) வளர்ச்சி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



## 'சிஸ்டம் சேஞ்ச்' என்றவர்கள் 'சிஸ்டத்தைக்' குழப்பியுள்ளனர்

### சாடுகின்றார் நாமல் ராஜபக்ச

கொழும்பு, ஜன.31

'சிஸ்டம் சேஞ்ச்' எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் இருக்கின்ற சிஸ்டத்தையும் குழப்பியுள்ளனர். தமது இயலாமையை மூடிமறைக்கவே எம்மை இலக்கு வைக்கின்றனர்- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச நேற்றுமுன்தினம் தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்தியக் குடியரசு தினத்தை முன்னிட்டு அங்குள்ள பல்கலைக்கழகமொன்றில் சிறப்புரையாற்றுவதற்கு அழைக்கப்பட்டிருந்தேன். நானும், எமது கட்சிப் பிரமுகர்களும் சென்றிருந்தோம். இது அரசாங்கத்துக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது இறுதியானது அல்ல, இன்னும் பல நிகழ்வுகளுக்கு எதிர்காலத்தில் செல்லவுள்ளேன்.

மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை இந்த அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியாமல் போயுள்ளது. இருக்கின்ற சிஸ்டத்தையும் குழப்பிவருகின்றனர். ஜனவரி மாதம் என்னைச் சிறையில் அடைப்பார்கள் என முன்னர் எச்சரித்திருந்தனர். இதற்காகக்கூட நான் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருக்கலாம்-என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு 5,000 சிவில் பாதுகாப்புப் படையினர்!

## அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவிப்பு

கொழும்பு, ஜன.31

**சிவில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் பேரை வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிகளுக்காக விடுவிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

சிவில் பாதுகாப்புப் படைத் தலைமையகத்துக்கு மேற்கொண்ட கண்காணிப்புப் பயணத்தின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வனஜீவராசிகள் திணைக்களம் மட்டுமன்றி, பொலிஸ் திணைக்களத்தின் பணிகளை வலுப்படுத்தவும் சிவில் பாதுகாப்புப் படையினர் பயன்படுத்தப்பட உள்ளனர். சுமார் 10 ஆயிரம் பேரை பொலிஸ் துறையுடன் இணைத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் நாட்டு மக்களின் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்த முடியும் என அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. சிவில் பாதுகாப்புப் படையின் ஒட்டுமொத்த வினைத்திறனை அதிகரிப்பதற்குத் தேவையான பயிற்சிகள், மனிதவள மேலாண்மை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாகவும் ஆராயப்படுகின்றது. படையினரின் தொழில்சார் திறன்களை மேம்படுத்துவதன் மூலம் அவர்களைப் பல்வேறு அரச சேவைத் துறைகளில் ஆக்கபூர்வமாக ஈடுபடுத்தமுடியும்-என்றார். (எ-இ)

## கெஹலிய விவகாரம்; பணமோசடியில் தொழிலதிபர் கைது

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்குச் சொந்தமானது எனக் கருதப்படும் சட்டவிரோதப் பணத்தைக் கையாண்ட குற்றச்சாட்டில் தொழிலதிபர் ஒருவரை லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர். முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, சட்டவிரோத நடவடிக்கைகளின் மூலம் சுமார் 748 மில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளார் எனக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. இந்த நிதியின் ஒரு பகுதியான 30 மில்லியன் ரூபாவை, பணச்சலவை செய்ய உதவியதோடு, அதனைத் தனது கைவசம் வைத்திருந்தார் எனக் குறித்த தொழிலதிபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## ஜனாதிபதி மருத்துவ நிதியத்திலிருந்து தென்மராட்சிவாசிக்கு சிகிச்சைக்கு நிதி

சாவகச்சேரி, ஜன.31

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஜனாதிபதி மருத்துவ நிதியத்திலிருந்து இருதய சத்திரசிகிச்சைக்கு 2இலட்சத்து 50ஆயிரம் ரூபா கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டது. ஜனாதிபதி நிதியத்தின் பிரதேச செயலகம் வரை பன்முகப்படுத்துதல் திட்டத்தின் மூலம் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இருதய சத்திரசிகிச்சைக்கான 5ஆவது கொடுப்பனவாக இது வழங்கப்பட்டது. (ச-41-9)

## திருமதி அழகிப்போட்டியில் இலங்கைக்கு மூன்றாமிடம்!



கொழும்பு, ஜன.31

அமெரிக்காவில் நடைபெற்ற 41ஆவது திருமதி உலக அழகிப்போட்டியில் தாய்லாந்தைச் சேர்ந்தவர் வெற்றி பெற்றுள்ளார். இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய சபீனா யூசுப், மூன்றாவது இடத்தைப் பிடித்தார். போட்டியை நடத்திய அமெரிக்காவைச் சேர்ந்த போட்டியாளர் இரண்டாவது இடத்தைப் பிடித்தார். உலகம் முழுவதிலுமிருந்து 60க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பெண்கள் இந்தப் போட்டியில் கலந்துகொண்டனர். (எ-இ)


## புதிய 100 புற்றுநோயாளர்கள் தினந்தோறும் அடையாளம்!

கொழும்பு, ஜன.31

நாட்டில் தினமும் சராசரியாக நூறு புற்றுநோயாளர்கள் புதிதாக அடையாளம் காணப்படுகின்றனர் என்று சமூக மருத்துவநிபுணர் டாக்டர் ஹசரலி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

புற்றுநோய் காரணமாக நாளொன்றுக்கு சுமார் 40 மரணங்கள் சம்பவிக்கின்றன. 2021ஆம் ஆண்டு 14 ஆயிரத்து 986 புற்றுநோய் மரணங்கள் பதிவாகியுள்ளன. இலங்கையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே அதிகம் காணப்படும் புற்றுநோய் வகைகள் வேறுபடுகின்றன. ஆண்கள் வாய்ப் புற்றுநோயில் முதலிடத்தில் உள்ளனர். பெண்கள் மார்பகப் புற்றுநோயில் முதலிடத்தில் உள்ளனர். அதனைத் தொடர்ந்து தைரொய்ட் மற்றும் பெருங்குடல் புற்றுநோய்கள் அதிகம் காணப்படுகின்றன. வயது முதிர்வு, பாலினம், குடும்பப் பின்னணி மற்றும் மரபணுக்கள் என்பன முக்கியமான காரணிகளாக அமைகின்றன-என்றார். (எ-இ)



## இ.போ.ச.-தனியார் பேருந்துகள் விபத்து

வவுனியா, ஜன.31

வவுனியா நெளுக்குளம் பகுதியில் இ.போ.ச. பேருந்தும் தனியார் பேருந்தும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் விபத்துக்குள்ளாகியுள்ளன. இந்த விபத்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடந்துள்ளது. விபத்தில் எவருக்கும் எவ்வித காயங்களும் ஏற்படவில்லை. சம்பவம் தொடர்பில் நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயும் வேண்டாம், தெள்ளும் வேண்டாம்!

'குனியக் குனியக் குட்டுறவனும் மடையன், குட்டு வாங்கிறவனும் மடையன்' எண்டு முந்தின ஆக்கள் சொல்லுவினம். எல்லாம் ஒரு அளவுக்குத் தான். ஒருத்தரைத் தண்டிக்கிறதுக்கும் ஒரு அளவிருக்குது. அதைமாதிரி தண்டனையை அனுபவிக்கிறதுக்கும் ஒரு அளவு இருக்குது. ஆனால் இப்பிடி தண்டிக்கிறதும், தண்டனை வாங்கிறதும் எல்லை மீறிப்போகேக்க, அது நாட்டுக்கே நாசமா வந்திடும்.

கொழும்பில, தேசிய பெண்கள் ஆணைக்குழுவின்ர தலைவி கலாநிதி ரமணி ஜெயசுந்தர, "இந்தப் பதவியும் வேண்டாம், ஒரு மண்ணாங்கட்டியும் வேண்டாம்" எண்டு பதவியைத் தூக்கி எறிஞ்சுபோட்டுப் போயிட்டாவாம். கேட்டால், சுயாதீனமாச் செயற்படவேண்டிய ஆணைக்குழுவில அமைச்சின்ர தலையீடு தாங்க முடியாமல் இருக்காம். "என்னைவிடப் பெரிய பெண்ணியவாதி உலகத்தில ஆருமில்லை" எண்டு மார்தட்டுற ஹரிணியம்மா பிரதமரா இருக்கேக்கயே ஒரு பொம்பிளை அதிகாரிக்கு இந்த நிலைமை எண்டால், அங்கால மனிசியை யாரோ 'அமத்தி வெருட்டி' வைச்சிருக்கினம் எண்டுதானே அர்த்தம்.

இது ஒரு பக்கம் இருக்க, மற்றப்பக்கமா விமான நிலைய அதிகாரசபையின்ர தலைவர், (விமானப் படையின்ர முந்தின தளபதி) ஹர்ஷா அபயவர்த்தனவும் ஒரு கடுதாசி எழுதிவைச்சிட்டுப் பதவியை விட்டுப் பறந்துபோட்டாராம். ஒரு ஜப்பான் பிக்குவுக்கு கட்டுநாயக்க எயார்போட்டில 'பாஸ்' கொடுக்கிறதில ஏதோ சிக்கல். உடன அந்தப் பிக்கு, மகாநாயக்கர்மாருக்கு மூட்டிவிட, அவை அமைச்சரிட்ட அண்டிவிட்டிட்டினம். அவ்வளவுதான், முந்தின விமானப் படைத்தளபதி எண்டும் பாக்காமல் அமைச்சர் 'காச்சு மூச்செண்டு' கண்டபடி கத்திப்போட்டாராம். யுத்தம் நடந்த காலத்தில எங்களுக்கு மேல எத்தினையோ குண்டுகளைப் போட்டு சந்தோசப்பட்ட விமானப்படையின்ர அந்த முன்னாள் தளபதியால, அமைச்சரின்ர 'கத்தல் குண்டை'தாங்கேலாமல் போட்டுதாம். அதால, "நாயும் வேண்டாம், தெள்ளும் வேண்டாம்" எண்டு அந்தாள் வேலையை விட்டிட்டுப் போயிட்டார்.

ஏற்கெனவே அமைச்சர் பிமலின்ர கட்டுப்பாட்டில இருக்கிற செயலாளர்மாரும், தலைவர்மாரும் 'சங்கீதக் கதிரை' மாதிரி, காலைமை பதவிக்கு வாறதும் பின்னேரத்துக்குள்ளயே பதவியை விட்டு ஓடுறதுமா இருக்கினம். திசைகாட்டியின்ர ஆட்சியில 'மாற்றம்' வரும் எண்டு பார்த்தால், இப்ப சர்வாதிகாரம் தான் கொடிகட்டிப் பறக்குது. அதிகாரிமார் எல்லாரும் 'இவங்களோட மானத்தை வித்துக் காலந்தள்ளேலாது'எண்டு சினப்படுகினமாம்.

இப்பிடியே போனால், கடைசியில ஒரு தகுதியான அதிகாரியும் கதிரையில மிஞ்சமாட்டினம். பிறகு உந்தப் 'பிரஜா சக்தி' மெம்பர்மாருக்கு கோட்டும் சூட்டும் போட்டுத் தான் நாட்டை ஓட்டவேண்டியிருக்கும் போல! 'ஊழலை ஒழிப்பம், ஒழுக்கத்தைக் கொண்டு வருவம்' எண்டு சொல்லிப்போட்டு, இப்ப ஆளுக்கு ஆள் அதிகாரம் பண்ணத் துவங்கினால், நாட்டில உருப்படியா ஒண்டும் நடக்காது கண்டியளோ! என்னதான் நடக்குது 'என்.பி.பி.'உலகத்தில?

padsi@uthayan.com - பட்சி

# கல்விக்கண்காட்சி யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,ஜன.31

வடக்கு மாகாண ரீதியான இலவச கல்விக் கண்காட்சி நேற்று ஆரம்பமாகியது. இன்று 31ஆம் திகதியும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ளது.

யாழில் பல்வேறு துறைகளை உள்ளடக்கி முன்னெடுக்கப்படவுள்ள மாபெரும் இந்தக் கண்காட்சியை 'ரீச்மீ' அமைப்பு நடத்துகின்றது.

இதுதொடர்பில் ரீச்மீயின் செயற்பாட்டாளர் அஞ்சலிகா தெரிவிக்கையில், சதுரங்கப்போட்டி, நடனப்போட்டி, பாடல் போட்டி, திரைப்படத்துறை தொடர்பான பயிற்சிகள், உணவுத் திருவிழா, வேலைவாய்ப்புகள், கல்வி கற்பதற்காக புலமைப்பரிசில்களுடன்கூடிய வாய்ப்புகள், வெளிநாட்டுக் கல்வி வசதி என்பன இந்தக் கண்காட்சியின்போது இடம்பெறும்- என்றார். (ச-27)

# மகாசிவராத்திரியை முன்னிட்டு மாகாண மட்டத்தில் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜன.31

மகா சிவராத்திரியை முன்னிட்டு, திருக்கேதீஸ்வரம் மட பரிபாலன சபையால் வருடாந்தம் நடத்தப்படும் பண்ணிசை மற்றும் பேச்சுப்போட்டிகள் இந்த வருடமும் நடத்தப்படவுள்ளன.

எனவே பாடசாலைமட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களை, வலயமட்டப் போட்டிகளுக்குத் தயார்ப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. வலயமட்டப் போட்டிகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் பி.ப.2.30 மணி வரை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இம்பெறும் என்று வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க)



# 'மறுபக்கம்' திரையிடல்

யாழ்ப்பாணம்,ஜன.31

இந்தியத் தேசிய திரைப்பட விருது பெற்ற புகழ்பெற்ற தமிழ்த் திரைப் படமான 'மறுபக்கம்', நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் இலவசமாகத் திரையிடப்படவுள்ளது.

18/2, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்திலுள்ள 'எங்கட புத்தகங்கள்' இல்லத்தில் மாலை 3.30 மணிக்கு யாழ்ப்பாணத் திரைப்படக்கழகம் இதனை ஒழுங்கு செய்துள்ளது.

கே.எஸ். சேதுமாதவன் இயக்கத்தில் வெளியான இந்தத் திரைப்படம், சிறந்த திரைப்படத்துக்கான இந்தியத் தேசிய விருதைப் பெற்ற முதல் தமிழ்த் திரைப்படம் என்ற பெருமையைக் கொண்டது. (ச)

# வலி.வடக்கில் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜன.31

வலிகாமம் வடக்கு, காங்கேசன்துறைப் பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாதப் பரிசளிப்பு விழாவும், இறுதி நிகழ்வும் காங்கேசன்துறையில் அமைந்துள்ள நடேஸ்வரக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் செயலாளர் சிவகுமார் சிவானந்தன், கௌரவ விருந்தினர்களாக யாழ். நடேஸ்வரக் கல்லூரி அதிபர் பாலசுந்தரம் பாலகுமார், யாழ். நடேஸ்வரக் கனிஷ்ட வித்தியாலய அதிபர் திருமதி வசந்தராணி சுதர்சன் ஆகியோர் கலந்துகொள்வர். (க-66,159)

# 'நலம் தரும் வேம்பு' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜன.31

'நலம் தரும் வேம்பு நூல்' வெளியீடு நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு, சுன்னாகம் பொது நூலகத்தில் இடம்பெறவுள்ளது. வரவேற்புரை மற்றும் தலைமையுரையை சமூக ஆர்வலர் சுந்தரமூர்த்தி புவனகுமாரும், அறிமுகவுரையை ஓய்வுபெற்ற ஆங்கில மொழிக் கற்பித்தல் பேராசிரியர் ம. சரவணபவஐயர், நூல் மதிப்பீட்டுரையை எழுத்தாளர் வடகோவை வரதராஜன் ஆகியோரும் நிகழ்த்துவர். (க)



# முத்துக்குமார் நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,ஜன.31

ஈழத்தமிழ் மக்களுக்காகத் தன்னுயிரை ஈகம் செய்த, ஈகைப் போராளி தமிழ்நாடு புலியநல்லூரைச் சேர்ந்த குமரேசன் முத்துக்குமாரின் 17ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வு, யாழ்.கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (க-66)

# அரசியற்கைதிகளின் விடுதலை எப்போது? இன்று கலந்துரையாடல்

வவுனியா, ஜன.31

'31 ஆண்டுகள் கடந்தும் விடுவிக்கப்படாத தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை எப்போது?' எனும் தலைப்பிலான கலந்துரையாடல் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை மாலை 3.15 மணி முதல் மாலை 4.15 மணி வரை யாழ். நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கலந்துரையாடலில் தமிழ்த்தேசியக் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் தவறாது கலந்துகொண்டு ஆதரவு வழங்குமாறு குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் கேட்டுள்ளார். (ச-66)



# புதிய அதிபர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஜன.31

வயாவிளான் குட்டியப்புலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்குப் புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மகாஜனக் கல்லூரியில் பிரதி அதிபராகக் கடமையாற்றிய திருமதி நளாயினி சஞ்சீவன் என்பவரே, குட்டியப்புலம் அரசினர் த.க.பாடசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்றுமுன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (க-555)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும்.

**இடபம்:** தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியங்கள் சற்று இழுபறிக்குப் பிறகு சாதகமாகமுடியும். சகோதரர்கள் கேட்கும் உதவியைச் செய்து தருவீர்கள்.

**மிதுனம்:** மனம் உற்சாகத்துடன் காணப்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குக் குடும்பத்தினருடன் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

**கடகம்:** இன்று அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவும் நேரிடும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும் சில சங்கடங்களும் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். அரசாங்கக் காரியங்கள் தாமதமாக முடியும்.

**கன்னி:** எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**துலாம்:** வீண் செலவுகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவுகள் எதுவும் எடுக்க வேண்டாம். கூடுமானவரை வீண் அலைச்சலைத் தவிர்த்துவிடுவது நல்லது.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். எதிர்பாராத செலவுகளைச் சமாளிக்கக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**தனுசு:** அரசாங்க அதிகாரிகளைச் சந்திக்கும்போது பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். கணவன்- மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கொடுத்த கடன் திரும்பக் கிடைக்கும். குடும்பத்தில் உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும்.

**மீனம்:** உற்சாகமான நாளாக அமையும். ஆனால், புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். சிலருக்குத் திடீர்ச் செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## திறன்பேசிகள் தொடர்பான கட்டுப்பாடுகள் அவசியமே!

சிறுவர்களின் சமூக ஊடகப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது என்ற விடயத்தை வெளிப்படுத்தியுள்ளார் சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சாவித்திரி போல்ராஜ். பாடசாலை மாணவர்களின் சமூக வலைத்தளப் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு, நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பது இலங்கையில் பல்வேறு தரப்புகளாலும் மிக நீண்ட காலமாக முன்வைக்கப்படும் வலியுறுத்தல்தான். எனினும், இதுவரை காத்திரமான தீர்வுகள் எடுக்கப்படாத நிலையில், தற்போதைய அரசாங்கம் செயற்பாட்டு ரீதியாகக் களத்தில் இறங்கியுள்ளமையும், பரிசீலனைகளை முன்னெடுப்பதும் பாராட்டப்பட வேண்டிய விடயங்களே.


பாடசாலை மாணவர்களைப் பொறுத்தவரை சமூக வலைத்தளங்கள் எனப்படுபவை 'மெல்லக் கொல்லும் நஞ்சாகவே' காணப்படுகின்றன. இது இலங்கைக்கு மட்டுமான பிரச்சினையல்ல. முழு உலகமும் இன்று மாணவர்களிடம் இருந்து சமூக ஊடகங்களை வெகு தொலைவாக வைப்பதற்கு கடும் நடவடிக்கைகளை எடுத்துவருகின்றன. அவுஸ்திரேலியா, பிரிட்டன், கனடா எனப் பல நாடுகளில் இந்தத் தடை முற்றாக நடைமுறைக்கு வந்துள்ளது. ஆகப்பிந்தியதாக, 16 வயதுக்குட்பட்ட மாணவர்கள் சமூக வலைத்தளங்களைப் பாவிப்பதற்கும், அணுகுவதற்கும் பிரான்ஸ் அரசாங்கம் இரு தினங்களுக்கு முன்னர் தடை விதித்திருக்கின்றது. இத்தகைய பின்னணி, ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தின் தற்போதைய முன்னெடுப்பு எவ்வளவுதூரம் அவசியமானது என்பதை பட்டவர்த்தனமாக்குகின்றது.

கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் ஒட்டுமொத்த கற்றல் செயன்முறைகளும் முடங்கிப்போயின. பெருந்தொற்று எப்போது முடியும், கல்விச் செயன்முறைகள் எப்போது வழமைக்குத் திரும்பும் என்பது தொடர்பில் இருண்மை நிலை நீடித்ததால், சில மாற்றுச் செயற்றிட்டங்கள் துரிதகதியில் பரிசீலிக்கப்பட்டன. அவற்றில் பிரதானமானது மாணவர்களின் கரங்களில் திறன் பேசிகளை வலிந்து திணிக்கும் முடிவு. திறன்பேசிகளைப் பறித்துவிட்டு புத்தகங்களைக் கொடுத்த காலம்மாறி, திறன்பேசிகள் மூலமாகவே கற்றல் என்று ஒட்டுமொத்த உலகக் கல்வி முறையும் மாறியது. இது மாணவர்கள் சமூக வலைத்தளங்களை அதிகம் பயன்படுத்துவதற்கும், கலாசாரச் சீரழிவிலும், சமூகப் பிறழ்வான நடத்தையில் ஈடுபடுவதற்கும் காரணமாகியது.

தற்கால உலகில் திறன்அலைபேசிகளும், தொடுதிரைகளும், சமூக வலைத்தளங்களும் ஆக்கிரமிக்காத இடங்களே இல்லை. இதனால், அவற்றை அணுகுவதும் பழக்கப்படுவதும், காலப்போக்கில் அவற்றுக்கு அடிமையாகிவிடுவதும் மிகச் சாதாரண சம்பவங்களாக இன்று மாறிவிட்டன. இதனால் நன்மைகள் இல்லாமலில்லை. வர்த்தகம், கல்வி, தொடர்பாடல் போன்ற துறைகளில் சமூகவலைத்தளங்களும் தொடுதிரைகளும் இன்று தவிர்க்கப்படமுடியாத சக்திகள். ஆனால், எவ்வளவுக்கெவ்வளவு மனிதகுலம் இவற்றை நெருங்கிச்செல்கின்றதோ அவ்வளவுக்கு 'மீண்டும் இணைக்கப்படமுடியாத' இடைவெளி எமக்குள் வேர்விட்டு வளரவே செய்கின்றது. ஆதலால், மாணவர்களைத் தொடுதிரைகளில் இருந்தும் சமூக வலைத்தளங்களில் இருந்தும் தூரவைப்பதற்கு முடியுமான அத்தனை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். இல்லையேல், திறன்பேசிகள் பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




### பொய்யாமொழி

**சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு**

**பொருள்:** அறம், சிறப்பையும் அளிக்கும்; செல்வத்தையும் அளிக்கும்; ஆகையால் உயிர்க்கு அத்தகைய அறத்தைவிட நன்மையானது வேறு யாது?




பெருந்தோட்டத் தொழிலாளர்களின்

## ரூ.1,750 சம்பள உயர்வு; ஒப்பந்தம் கைச்சாத்து

**கொழும்பு, ஜன.31**
**பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை ஆயிரத்து 750 ரூபாவாக அதிகரிப்பது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் நேற்றுப் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சில் கையெழுத்திடப்பட்டுள்ளது.**

2026ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் போது, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளம் ஆயிரத்து 750 ரூபாவரை அதிகரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.
அடிப்படைச் சம்பளத்தை ஆயிரத்து 350 ரூபாவிலிருந்து ஆயிரத்து 550 ரூபாவாக 200 ரூபா அதிகரிப்பதற்கும், வருகைக்கான கொடுப்பனவாக 200 ரூபாவை அரசாங்கம் செலுத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டது.
இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் 5 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (எ-இ)



### 4 கிலோ கொக்ஹெய்ன்; பெண்ணொருவர் கைது

கொழும்பு,ஜன.31
வீட்டிலுள்ள அலுமாரியில் 345 போதைமாத்திரைகள் மற்றும் 4 கிலோ கொக்ஹெய்ன் போதைப்பொருள் என்பவற்றை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
மேல்மாகாணத்தின் வடக்கு பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் கம்பஹாவில் கணேமுல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொல்லதே பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் அவர் கைதானார்.
கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி 22 கோடி ரூபா எனத் தெரியவந்துள்ளது. (ச-இ)



### மருந்தகம் போர்வையில் போதைப்பொருள் விற்பனை

கொழும்பு,ஜன.31
மருந்தகம் ஒன்றை நடத்திச் செல்லும் போர்வையில் மிக சூட்சுமமான முறையில் போதைமாத்திரை வர்த்தகத்தில் ஈடுபட்ட இருவரைப் பொல்கஹவெல பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.
சந்தேகநபர்களிடமிருந்து 2,000 போதை மாத்திரைகளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ச)

### புதிய அரசியற்கட்சிகளிடம் விண்ணப்பங்கள் கோரல்

கொழும்பு.ஜன.31
2026ஆம் ஆண்டில் அரசியற்கட்சிகளை அங்கீகரிப்பதற்காக, தகுதியுள்ள அரசியற்கட்சிகளிடமிருந்து தேர்தல் ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
அதற்கமைய, குறித்த விண்ணப்பங்களை ஜனவரி 28ஆம் திகதி முதல் பெப்ரவரி 28ஆம் திகதி வரை சமர்ப்பிக்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



## ஊழல் ஒழிப்புத் தரவரிசை; இலங்கை 121ஆவது இடம்

கொழும்பு.ஜன.31
2024ஆம் ஆண்டுக்கான உலகளாவிய கையூட்டல் மற்றும் ஊழல் புலனாய்வுக் குறியீட்டில் இலங்கை 121ஆவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க தெரிவித்துள்ளார். இதேவேளை இந்தியா 93ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 135ஆவது இடத்திலும், பங்களாதேஷ் 149ஆவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை - தை 18
01.02.2026
சுபநேரம் : 09.36 – 11.06
ராகுகாலம் : 05.06 - 06.36


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிலை, மதுபானத்தால் ஆண்டுதோறும் 22,000 சாவுகள்

கொழும்பு, ஜன.31

**புகையிலை மற்றும் மதுபானப் பயன்பாடு காரணமாக இலங்கையில் ஆண்டுதோறும் சுமார் 22 ஆயிரம் பேர் உயிரிழப்பதுடன், இதன் விளைவாக நாட்டில் வருடத்துக்கு 225 பில்லியன் முதல் 240 பில்லியன் ரூபாவரை நட்டம் ஏற்படுகின்றது என்று புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபை தொடர்பாக, சுகாதார, ஊடக மற்றும் மகளிர் வலுவூட்டல் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவில் இடம்பெற்ற நிறுவன ரீதியான மீளாய்வின்போதே அதிகாரிகள் இந்தத் தகவல்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலைமையிலிருந்து மீள்வதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கி, புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் சட்டத்தைத் திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

உலகில் 104 நாடுகள் தனித்தனி சிகரெட்டுகளை விற்பனை செய்யத் தடைவிதித்துள்ளன என்றும், அந்தச் சட்டத்தை இலங்கையிலும் நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அதிகாரசபை அதிகாரிகள் அதில் வலியுறுத்தியுள்ளனர். சிகரெட்டுகளுக்கான வரி விதிப்பானது, விலையைத் தீர்மானித்த பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தையும் அதிகாரிகள் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர். அங்கு கருத்துத் தெரிவித்த குழுவின் தலைவர், புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் சட்டத் திருத்தங்கள் மற்றும் ஏனைய வேலைத்திட்டங்களுக்குத் தேவையான முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயார் என்று தெரிவித்துள்ளார். (எ-இ)



## சேவைநலன் பாராட்டு விழா

மன்னார், ஜன.31

தலைமன்னார்த் துறை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடமையாற்றி, ஓய்வு பெறும் பாடசாலையின் அதிபர் ஜேசுதாசன் விஜயகுமாருக்கான சேவைநலன் பாராட்டு விழா, பாடசாலையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. குறித்த பாடசாலையில் பல வருடங்களாகக் கடமையாற்றி ஓய்வுபெறும் அதிபர் ஜேசுதாசன் விஜயகுமார், மாலை அணிவித்து இசை வாத்தியத்துடன் மேடைக்கு அழைத்து வரப்பட்டார். அங்கு அவருக்குக் கௌரவிப்பு வழங்கப்பட்டது. சிறப்பு நிகழ்வாக அகவை 60 நிறைவில் பதிவுகள் 'விஜயாலயம்' என்ற மலர் வெளியீடு இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-56)

## கள்ளுத் தவறணையை அகற்றுமாறு கோரி மனு

யாழ்ப்பாணம், ஜன.31

மல்லாகம் குளமங்கால் வீதியில் இயங்கிவரும் கள்ளுத் தவறணையை உடனடியாக அகற்றுமாறு கோரி, அந்தப் பகுதி மக்களால் அதிகாரிகளுக்கு மனு அனுப்பப்பட்டுள்ளது.

கள்ளுத் தவறணையிலிருந்து சுமார் 60 மீற்றர் தூரத்தில் மல்லாகம் நீதவான் நீதிமன்றமும், அண்மித்த பகுதியில் சவேரியார் ஆலயம் மற்றும் பாடசாலை ஆகியன அமைந்துள்ளன.

கள்ளுத் தவறணைக்கு வருவோர் தகாத வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்துவதுடன், போதை வியாபாரங்களிலும் ஈடுபடுகின்றனர்.

இதனால் அவ்வீதியால் செல்லும் பாடசாலை மாணவர்கள், பெண்கள் எனப் பல தரப்பினரும் தினமும் பாதிக்கப்படுகின்றனர். எனவே குறித்த கள்ளுத் தவறணையை உடனடியாக அங்கிருந்து அகற்ற, உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், வடமாகாண மதுவரித் திணைக்களப் பணிப்பாளர், தெல்லிப்பழைப் பிரதேச செயலர் மற்றும் மதுவரித் திணைக்களத்தின் சுன்னாகம் அலுவலகப் பொறுப்பாளர் ஆகியோருக்கே இந்த மனு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (க-66)



## சட்டவிரோத கசிப்பு விற்பனை; வலைஞர்மடத்தில் கட்டுப்படுத்துக

*ரவிகரன் எம்.பி. கோரிக்கை*

முல்லைத்தீவு, ஜன.31

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வலைஞர்மடம் கிராமத்தில் அதிகரித்துள்ள கசிப்பு விற்பனையை விரைந்து கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் இதனைச் சுட்டிக்காட்டினார். வலைஞர்மடம் கிராமத்தில் காய்ச்சப்படும் கசிப்பு அம்பலவன்பொக்கணை, மாத்தளன், செம்மண்குன்று உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு விநியோகம் செய்யப்படுவதாக மக்கள் முறையிட்டுள்ளனர். பொலிஸார் குறித்த கசிப்புக் காய்ச்சுபவர்களிடம் கையூட்டுகளைப் பெறுவதாகவும் தகவல் கிடைத்துள்ளது. எனவே இதனைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை விரைந்து இடம்பெறவேண்டும் என்றும் குறிப்பிட்டார். இதன்போது பதிலளித்த முல்லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், இவ்வாறு சட்டவிரோத கசிப்பு நடவடிக்கையைக் கட்டுப்படுத்த மிகக்கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றோம்- என்றார். (ச-246)

## 40 ஆண்டுகளின் பின்னர் மன்னாரில் திறக்கப்படும் வீதி


மன்னார், ஜன.31

மன்னார் நீதிமன்ற வளாகத்துக்கு அருகில் பல தசாப்தங்களாக மூடப்பட்டிருந்த வீதியொன்று மன்னார் நகரசபையினால் செப்பனிடப்பட்டு விரைவில் மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப் படவுள்ளது.

இந்த வீதி 1983 - 1984 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை மக்கள் பயன்பாட்டில் இருந்தது. நாட்டில் நிலவிய போர்ச்சூழல் காரணமாக, இவ்வீதி மூடப்பட்டு அந்தப் பகுதியில் இராணுவச் சோதனைச் சாவடிகள் மற்றும் 'பாஸ்' வழங்கும் அலுவலகங்கள் செயற்பட்டு வந்தன.

யுத்தம் நிறைவடைந்த பின்னரும், குறித்த வீதி நீதிமன்றக் கட்டுக்காவல் பொருள்கள் சேமிக்கப்படும் இடமாகப் பயன்படுத்தப்பட்டு வந்ததால், பொதுமக்கள் பயன்படுத்தமுடியாத நிலையில் புதர்கள் மண்டிக் காணப்பட்டது. தற்போது, மன்னார் நகரசபையினால் அந்த வீதி மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகள் முழுமையாகத் துப்புரவு செய்யப்பட்டு, புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அனைத்துப் பணிகளும் நிறைவடைந்ததும், நான்கு தசாப்தங்களுக்குப் பிறகு இந்த வீதி மீண்டும் மக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்படவுள்ளது. (ச-56)

## மன்னாரில் நெல் கொள்வனவு; ஒரு விவசாயிடமிருந்து 2500 கிலோ கொள்முதல்



மன்னார், ஜன.31


மன்னார் ஆட்காட்டிவெளியிலுள்ள நெல் சந்தைப்படுத்தும் சபை, தனது களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்படக்கூடியவற்றுக்கு ஏற்றவாறு மட்டுப்படுத்தப்பட்ட முறையில் ஒரு விவசாயிடமிருந்து 2500 கிலோகிராம் எனும் அடிப்படையில் நெல் கொள்வனவு செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அடம்பன் ஆட்காட்டிவெளியில் 3 களஞ்சியசாலையில் 3000 மெற்றிக்தொன் நெல்லும், முருங்கனிலுள்ள ஒரு களஞ்சியசாலையில் 2000 மெற்றிக்தொன் நெல்லும் நானாட்டானிலுள்ள ஒரு களஞ்சியசாலையில் 500 மெற்றிக்தொன் நெல்லும் களஞ்சியப்படுத்தக் கூடியதாகவுள்ளது.

அத்துடன் மன்னார் விவசாயிகளின் நலன் கருதி மன்னார் விவசாயிகள் தங்களிடம் உள்ள நெல்லை உறுதிப்படுத்தும் பட்சத்தில் முழங்காவிலிலும் நெல்லைக் களஞ்சியப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒரு கிலோகிராம் நாடு 120 ரூபாவுக்கும், ஒரு கிலோகிராம் சம்பா 130 ரூபாவுக்கும், ஒரு கிலோகிராம் கீரிச்சம்பா 140 ரூபாவுக்கும் கொள்முதல் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி புராதன வாரிவனசுவாமி (வாரியப்பர்) கோவில் பெருந்திருவிழாவின் சப்பறத் திருவிழா கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. கோவிலுக்குப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இந்தச் சப்பறத்தின் வெள்ளோட்டம் அன்றையதினம் காலை இடம்பெற்றது. (ச-41-9)




ஊர்காவற்றுறை பொதுநூலக சிறுவர் பிரிவுக்கு அமைக்கப்பட்ட கட்டடம் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப்பட்டது. அரசு சாரா நிறுவனங்கள் மன்றம் மற்றும் நண்பர்கள் நிறுவனத்தினரின் நிதி யனுசரணையுடன் இந்தக் கட்டடம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. (ச-41-9)



இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் கால்கோள் விழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கணக்காளர் சோ.பிரபு சிறப்பு விருந்தினராக கொடிகாமம் தேசிய சேமிப்பு வங்கியின் உதவி முகாமையாளர் பு.ரகுநந்தன், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச-159)

பளை இத்தாவில் வேம்பொடுகேணி சீ. சீ.த.க. பாடசாலையில் தரம்1மாணவர்களுக்கான கால்கோள் விழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வடக்கு கல்வி வலய சுகாதாரமும் உடற்கல்வியும் பாட சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர் ஆ.பவானந்தன் கலந்துகொண்டார். (ச-41-9)







சாவகச்சேரி சக்தி அம்மன் தமிழ் வித்தியாலயத்தில் தரம் ஒன்று வகுப்பில் இணைந்த மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அதிபர் தலைமையில் இடம்பெற்றது. (ச-41-9)

## சஞ்சிகை வெளியீடும் வாசிப்புமாத நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஜன. 31

2025ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும் பரிசில் வழங்கலும் ஊர்காவற்றுறை பிரதேசசபை புளியங்கூடல் பொதுநூலக மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

பிரதேசசபைத் தவிசாளர் அன்னலிங்கம் அன்னராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வேதநாயகி பேரின்பநாதன் பங்கேற்றார். (ச-41-9)

## கலாபூஷணம் விருது பெற்ற கலைஞருக்குக் கௌரவிப்பு



யாழ்ப்பாணம்,ஜன. 31

கலாபூஷணம் விருது பெற்ற மன்னார் மாவட்டம் பேசாலையைச் சேர்ந்த ஓய்வுநிலை ஆசிரியர் கலைஞர் எஸ்.ஏ.உதயனுக்கான பாராட்டு மற்றும் வாழ்த்தும் விழா பேசாலை சீ. வியூ ஹோட்டலில் கடந்த வாரம் இடம்பெற்றது.

பேசாலை மரபுக்கலைஞர்களின் பங்களிப்போடு விழிகள் கலா முற்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில், கலைஞர்கள், மாவட்ட கலாபூஷண விருதாளர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், அருட்தந்தையர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



அலரிமாளிகையில் கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற கலாபூஷணம் விருது வழங்கல் விழாவில், இவருக்கான விருது வழங்கப்பட்டது.

இவருடன், இதுவரை பேசாலையில் 3 பேர் கலாபூஷணம் விருதைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-60)

யாழ்.வட இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் 1 இல் புதிதாக இணைந்து கொண்ட மாணவர்களுக்கான கால்கோள் விழா நேற்று வியாழக்கிழமை பாடசாலையின் மண்டபத்தில் அதிபர் பா.யசிதரன் தலைமையில் இடம்பெற்றது. (ச-66-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழர்களின் வழிகாட்டி ரி.குமாருக்கு அஞ்சலி!

யாழ்ப்பாணம், ஜன. 31

மனித உரிமைப் போராளி ரி.குமார் என்று அழைக்கப்படும் த.முத்துக்குமாரசாமிக்கான அஞ்சலி நிகழ்வு தமிழர்தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் கடந்த செவ்வாய்க்கிழமை அனுஸ்டிக்கப்பட்டது. உள்நாட்டு விசாரணைகள் தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுத் தராது என்பதையும், சர்வதேச விசாரணையும், சர்வதேச மேற்பார்வையிலான சுயநிர்ணய வாக்கெடுப்புமே தீர்வு என்பதையும் அவர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

நாங்கள் பேசமுடியாத இக்கட்டான காலங்களில், எமக்காக உலக அரங்கில் குரல் கொடுத்தவர் ரி. குமார். அவர் ஒரு சாதாரண மனித உரிமை ஆர்வலராக மட்டுமன்றி, பாதிக்கப்பட்ட தமிழர்களின் மனச்சாட்சியாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்தார் என அஞ்சலி நிகழ்வின்போது நினைவுகூரப்பட்டார். (ச-110)



ஊர்காவற்றுறை பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வும், காவலூர்-3 சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வும் ஊர்காவற்றுறைப் பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் கடந்த வாரம் இடம்பெற்றன. (கு-9)

# தொழில்நுட்பத் துறைக்கு விண்ணப்பங்கள் கோரல்

வடக்கு மாகாணப் பொதுச்சேவையில் காணப்படுகின்ற தொழில்நுட்பத்துறை சார்ந்த பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப்பரீட்சைமூலம் நிரப்பப்படவுள்ளன. அதன்படி மாகாணத் தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் குடிசார் (Technical Officer Civil) தரம் III அல்லது பயிற்சித்தரம், மாகாணத் தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மின்னியல் (Technical Officer Electrical) தரம் III அல்லது பயிற்சித் தரம், மாகாணத் தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் படவரைஞர் (Technical Officer Draughtsman) பயிற்சித் தரம் ஆகியவற்றுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. முழுமையான விளம்பர அறிவித்தல்கள் மற்றும் விண்ணப்படிவங்களை www.np.gov.lk எனும் மாகாண இணையத்தளத்தில் 'Exam and Recruitment Advertisement 2026' எனும் பகுதியின் ஊடாகப் பார்வையிடவும், தரவிறக்கம் செய்யவும் முடியுமென ஆணைக்குழுவின் செயலாளர் ஆ. சிறி தெரிவித்துள்ளார். (ச-66)

**மலிவு விற்பனை**

இன்றும் நாளையும் ஒரே விலையில்
1 பூங்கன்று வாங்கினால்
1 பூங்கன்று இலவசம்.
யாழ் சிற்றி பாம்
755, மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.
தொடர்புகளுக்கு:-
075 944 4601
(CS/60601) J-1

**மணமகன் தேவை**

யாழ் கிறிஸ்தவம் NON R.C (V)
மணமகளுக்கு படித்த உத்தியோகம் செய்யும் மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
(உள்நாடு மட்டும்.)
தொடர்புகளுக்கு:- 070 554 0384
(CS/60600) J-1

**வேலையாட்கள் தேவை**

கட்டட நிர்மான நிறுவனத்திற்கு மேசன்/ கூலியாட்கள் தேவை.
070 42 11 575

**காணி பராமரிப்பாளர் தேவை**

கச்சாய் வீதி, சாவகச்சேரியில் காணியை பராமரிப்பதற்கு காணி பராமரிப்பாளர் தேவை.
கச்சாய், சாவகச்சேரி, மட்டுவில் பகுதியில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:- 071 947 0614
(CS/60596) J-1

**வேலையாட்கள் தேவை**

விற்பனை உதவியாளர் தேவை.
தொடர்பு முகவரி:
310A. ஆஸ்பத்தரி வீதி,
யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கி அருகாமையில்)

**மணமகள் தேவை**

லண்டன் குடியுரிமை பெற்றவர், 1981ம் ஆண்டு பிறந்தவர், A/L பூரணசித்தி பெற்றவர். இவருக்கு நன்றாக ஆங்கிலம் எழுத, பேச, படித்த பெண்ணை எதிர்பார்க்கின்றோம். லண்டனில் வசிக்கும் பெண்ணையும் எதிர்பார்க்கின்றோம்.
சீதனம் எதிர்பார்ப்போம்.
தொடர்புகளுக்கு:- 077 668 3717
(CS/60580) J-1

**நல்லூர் கந்தன் திருமண சேவை**

எம்மிடம் எல்லா இனத்தவர், மதத்தவர், உத்தியோகம் உத்தியோகம் அல்லாதது, எல்லா மணமக்களுக்கும் மணமகன்கள் மணமகள்கள் உண்டு.
தொடர்பு: வி.ஜெயந்தி
077 97 33 183
குறிப்பு : சபைகளில் உள்ள மணமக்களும் தொடர்புகொள்ளலாம்.

**காணி உடனடி விற்பனைக்கு**

யாழ். அரியாலையில் 24 பரப்பு குடியிருப்புக் காணி உடனடி விற்பனைக்கு. 3 அறை வீடு, 2 கிணறுகள், 40 தென்னை மரங்கள் கொண்டது. A-9 கண்டி வீதி 200 மீ தூரத்தில். யாழ். நகர் 15 நிமிடம்.
விபரங்களுக்கு:
074 300 7992
WhatsApp +44 7414 942508

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

**15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம்
21.12.1948

மறைவு
19.01.2011

**அமரர் சுந்திரா சிவகுருநாதன்**

திதி : வளர்பிறை சதுர்த்தசி

ஆருயிர் அன்னையே
ஆண்டுகள் பதினைந்து
ஆயினும் எம்மிதயம் ஆறிடா
ஆற்றிடும் நின் நினைவுகள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குருஸ்தான்,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
(CS 31114) A

குரு சரணம்



உலகெங்கும் ரெய்கி வகுப்புகள் மற்றும் பல ஆன்மீக பயிற்சி வகுப்புகள் எடுத்து வரும்,
International Reiki Grand Master
அம்மா Dr. Meenakshi A M.B.B.S., DGO.,
அவர்களின் இலங்கை விஜயம்

வரும் ஜனவரி 24 முதல் பிப்ரவரி 15 வரை
கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில்
உங்களை நேரில் சந்தித்து,
தீட்சை தர உள்ளார்கள்



வாழ்க்கை பிரச்சினைகளிலிருந்து நம்மை விடுவித்து வாழ்வை வளமாக்கும் ரெய்கி தீட்சை பெற்று வாழ்வில் மேன்மை பெறுங்கள்!

ரெய்கி 1 & 2 மற்றும் தெய்வீக கலைகள் பயிற்சி பற்றிய விவரங்களுக்கு
0772 382 566
என்ற எண்ணிற்கு Whatsapp-ல் தொடர்பு கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கனடாத் தூதுவருடன் தமிழரசுக்கட்சி சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜன.31

கடந்த 26ஆம் திகதி திங்கட்கிழமை இலங்கைக்கான கனடாத் தூதுவர் இஸபெல் மார்டின், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ. வி. கே. சிவஞானம் மற்றும் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் சந்தித்து உரையாடினார். சந்திப்பில் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளையும் நிலைப்பாட்டினையும் கனடா தொடர்ச்சியாக ஆதரித்துவரும் பின்னணியில், அதற்காக இலங்கை தமிழரசுக் கட்சியினர் நன்றி தெரிவித்ததோடு தொடர்ந்தும் எதிர்காலத்தில் அத்தகைய ஆதரவை நாம் நாடி நிற்பதை அவருக்குத் தெரியப்படுத்தியதாக பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (ச-27)

# நெல் கொள்வனவு செய்யாவிடின் மாவட்டச் செயலகம் முற்றுகை!

## ரவிகரன் எம்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு,ஜன.31

**நெல் சந்தைப்படுத்தல் சபையினூடான நெல் கொள்வனவு நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்காவிட்டால், விவசாயிகளுடன் இணைந்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தப்படும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த 26ஆம் திகதி முதல் நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்படும் என நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் அமைச்சர் கே.டீ. லால்காந்த உறுதியளித்திருந்தார். எனினும் இதுவரை கொள்வனவு நடவடிக்கைகள் தொடங்கப்படவில்லை.

தற்போது பெரும்போக அறுவடை மும்முரமாக நடைபெற்றுவரும் நிலையில், அரசாங்கம் நெல்லைக் கொள்வனவு செய்யாததால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தைச் சந்தித்துள்ளனர். விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும்வகையில் இந்த விவகாரத்தில் இனியும் தாமதம் காட்டக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தினார். (ச-246)





சிலாவத்தை தெற்கு தியோகுநகர் புனித ஜோசெப் வாஸ் தேவாலயத்தின் திருவிழா அண்மையில் சிறப்புற இடம்பெற்றது. (ச-246)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பயங்கரவாத மாற்றுச்சட்டம் முல்லைத்தீவில் எதிர்ப்பு!

இலங்கை அரசினால் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள தேசிய ரீதியான பயங்கரவாத பாதுகாப்புச் சட்டவரைவு தொடர்பில் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு இலங்கை செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

சூழல் மற்றும் சமூகத்தின் அபிவிருத்தியை வலுவூட்டும் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய ஒருங்கிணைப்பாளர் டி.கனகராஜ் வளவாளராகக் கலந்துகொண்டார். இதில் சிவில் சமூக அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள், மீனவ மற்றும் விவசாய அமைப்புகள் எனப் பல தரப்பினர் பங்கேற்றனர்.

இதன்போது மக்களுக்குப் பயன் அளிக்காத இந்தப் புதிய சட்டவரைவு முழுமையாகத் திரும்பப் பெறப்பட வேண்டும். இந்தச் சட்டம் குறித்த விழிப்புணர்வு போதாமையால், கருத்துத்தெரிவிக்க மேலும் 3 மாத கால அவகாசம் வழங்கப்படவேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்பட் டது. அத்துடன் எதிர்வரும் பெப்ரவரி முதல் வாரத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுதொடர்பான மேலதிக விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ச-19,35)

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 09 . 1951



மறைவு 30 . 01 . 2026

### சிவபாலேஸ்வரி பத்மயோகன்

இல.22/18, விதானை வீதி, சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாலேஸ்வரி பத்மயோகன் அவர்கள் நேற்று (30.01.2026) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மயோகனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவராஜா - அரியமலர் தம்பதியரின் அன்பு மகளும், சிவராஜேஸ்வரன், சிவகுமாரி, சிவகுமார், சிவராஜகுமார், சிவயோகமலர் (சத்தியா), சிவறாஜமலர், சிவயோகராசா, சிவஜயந்தி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தேவகுமாரி, காலஞ்சென்ற ஜசிந்தா மற்றும் மதிவதனி, சூரியகுமாரன், சிவகுமார் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.02.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல.22/18, விதானையார் வீதி, சுண்டிக்குளியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சகோதரர்கள் குடும்பத்தினர்.

(CS 31118) A

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 10 . 1955



மறைவு 27 . 01 . 2026

### அமரர் தர்மதேவி செல்வராசா

யாழ்.சாவகச்சேரி நுணாவிலைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மதேவி செல்வராசா அவர்கள் 27.01.2026 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா-கனகப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், செல்வராசா செல்லப்பா அவர்களின் பாசமிகு துணைவியும், பாலகுமார்(இங்கிலாந்து), துஷியந்தினி(கனடா), சுஜாந்தினி (இங்கிலாந்து), மனோத்குமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜீவராசா, காலஞ்சென்ற வரதராஜா ஆகியோரின் அருமைச் சகோதரியும், பாமா (இங்கிலாந்து), மோகனதாஸ் (கனடா), சுரேந்திரன் (இங்கிலாந்து), சியாமளா (கனடா) ஆகியோரின் மாமியாரும், செ.சண்முகநாதன், ப.அன்னலட்சுமி, சு.சாந்தநாயகி, செ.சிவராசா ஆகியோரின் மைத்துனியும் சுமன், கிஷானி, சௌம்யா, தினுஜா, சுஜின், நிவின்சன், ஆனன்யன், அனன்யா, அஞ்ஞிவ், அரிஸ், ஆஹானா, அஜிஸ் ஆகியோரின் பேத்தியும், செல்லத்துரை நாகேஸ்வரி தம்பதிகளின் மருமகளும், ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (01.02.2026) ஞாயிற்றுக்கிழமை மு.ப 07:00 மணியளவில் மட்டுவில் தெற்கு, மட்டுவில்(சரஸ்வதி பாடசாலைக்கு அருகாமையில்) எனும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடை பெற்று பின்னர் மு.ப 09:00 மணியளவில் குச்சப்பிட்டி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
செல்வராசா –கணவர்
தொடர்பு : 0774383779

'ஓம் விராட்விஸ்வப் பிரம்மனே நமஹ'

## மரண அறிவித்தல்



### சிவக்கொழுந்தன் துரைராசா

**(B.Eng Dowson College Professor, ECG Specialist)**

யாழ். அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு சொர்ணவடலி, கனடா Montreal ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்தன் துரைராசா அவர்கள் கடந்த 25.01.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்தன் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சிவபாக்கியம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும், யோகம்மா அவர்களின் ஆருயிர்க் கணவரும், சாந்தினி, சுரேஜினி, பகீரதன்(பாபு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கைலாயதுரை மற்றும் ரவிச்சந்திரா, அனந்தவர்ஷினி ஆகியோரின் ஆசை மாமனாரும், சர்மிளா - கோகிலன், ஆர்த்தி, ஆருணி, ஆருஜன், பவநிதா, பவிஷா, பவர்ஷா ஆகியோரின் பாசமிகு பேரனும், கவிஷ், ரியா, ஆதித் ஆகியோரின் பாசமிகு பூட்டனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன் - விமலாதேவி, கனகம்மா - கனகரெத்தினம், ராஜேஸ்வரி, நாகேஸ்வரி மற்றும் யோகேஸ்வரி - காலஞ்சென்ற செல்லையா, காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி, விக்னேஸ்வரி - ஸ்ரீரங்கநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பாலரெத்தினம் - மகாலட்சுமி, தங்கராசா - ருக்மணி மற்றும் இராஜேஸ்வரி, காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் யோகரெத்தினம் - ராகினிதேவி, காலஞ்சென்ற யோகராசா மற்றும் - சோமாவதி, விமலாதேவி - காலஞ்சென்ற தங்கவேல், மற்றும் கமலாதேவி - அருளானந்தா, விஸ்வரெத்தினம் - மாலினி, புஸ்பரெத்தினம் - காலஞ்சென்ற தர்மகுலராசா, மற்றும் நகுலேஸ்வரன் - சுமதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.02.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரை Complexe Funeraire Aeterna et Crematorium - 55 Rue Gince, Saint _ Laurent, QC H4N1J7, Canada இல் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 10.09.1938

மறைவு 25.01.2026

து.பகீரதன் (பாபு)- மகன்
Mobile : +16138537361

தகவல் :
குடும்பத்தினர்.

(CS 60593) A

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பல்பொருள்...

அங்காடிக்கு 72 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த பல்பொருள் அங்காடியில் பழுதடைந்ததும், மனிதநுகர்வுக்குப் பொருத்தம் இல்லாததுமான பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை அண்மைய பரிசோதனையில் கண்டறியப்பட்டது.

இது தொடர்பில் பல்பொருள் அங்காடியின் உரிமையாளருக்கு எதிராக, பருத்தித்துறை நகரசபையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ப.தினேஸால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

பல்பொருள் அங்காடியின் உரிமையாளர் தவறை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து, அவரைக் கடுமையாக எச்சரித்த நீதிமன்றம் 72 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து நடவடிக்கை எடுத்தது. (அ-ம-100)

## கிவுல்...

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

கிவுல் ஓயா திட்டம் என்பது மிகப்பெரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகும். இந்தத் திட்டம் முற்றாகச் செயற்படுத்தப்பட்டால், தமிழர்களின் நிலங்கள் பறிபோவதுடன், தமிழர் தாயகத்தின் இனப்பரம்பல் மாற்றியமைக்கப்படும். இவ்வாறான பேராபத்தான அம்சங்கள் உள்ள காரணத்தாலேயே, இந்தத் திட்டத்தை நாங்கள் தீர்க்கமாக எதிர்க்கின்றோம்.

கிவுல் ஓயா திட்டம் நடைமுறைக்கு வரக்கூடாது. அதை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்துவது அவசியம். எனவே, இந்தப் போராட்டத்தின் முக்கியத்துவம் கருதி மக்கள் பெருந்திரளாக இதில் கலந்து கொள்ள வேண்டும். தமிழ், முஸ்லிம், சிங்களம் என நாம் இனவாதத்தையோ பிரிவினைகளையோ ஏற்படுத்த முயலவில்லை. எமது மக்களுக்குரிய நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிராகவே போராடுகின்றோம். வவுனியா வடக்கு பிரதேசம் தமிழர்களிடமிருந்து பறிபோகாமல் இருக்கவேண்டுமெனில் இந்தப் போராட்டம் மிகவும் அவசியமானது. கிவுல் ஓயா போன்று நாளை ஏனைய இடங்களிலும் ஆக்கிரமிப்புகள் இடம்பெறலாம். எனவே, கிவுல் ஓயாவை எதிர்ப்பதே எமது நிலத்தின் இருப்பை உறுதிப்படுத்தும் பிரதான வழிமுறையாக அமையும் - என்றுள்ளது. (அ-ம)

## புலனாய்வுத்...

அவருக்கு மணிக்கட்டில் ஊசி மூலம் மருந்து செலுத்தப்பட்டது. ஓரிரு நாள்களில் மணிக்கட்டு வீக்கமடைந்து பின்னர் அந்தப் பகுதி வெட்டி அகற்றப்பட்டது.

இந்த விடயத்தில் மருத்துவத் தவறு நேர்ந்துள்ளதாக சிறுமியின் பெற்றோர் குற்றஞ்சாட்டியதுடன், பல்வேறு தரப்பினரிடம் தமக்கான நீதியையும் கோரியிருந்தனர். இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் உசைன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

கடந்த தவணையின்போது மூன்று மருத்துவர்களை சந்தேகநபர்களாகப் பெயரிடப் போவதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர். ஆனால் அவர்களைச் சந்தேகநபர்களாகப் பெயரிட வேண்டிய அவசியம் இல்லை என்று நேற்று பொலிஸார் தெரிவித்தனர். இதையடுத்தே, கடந்த இரண்டரை வருடங்களுக்கும் மேலாக நீடித்துவரும் இந்த வழக்கை பொலிஸார் கையாளும் விதம் தொடர்பில் நீதிபதி தனது கடுமையான அதிருப்தியைத் தெரிவித்தார்.

'மருத்துவர்களைக் கைது செய்வதற்கு அல்லது சந்தேகநபர்களாக இணைப்பதற்கு சட்டமா அதிபரின் அனுமதி ஆலோசனை பெற வேண்டுமாயின், தாதியர்களைக் கைதுசெய்து சந்தேகநபர்களாக முற்படுத்தியதிலும் அதே நடைமுறையே பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். ஒரே வழக்கில், இருவேறு நிலைப்பாட்டுடன் பொலிஸார் செயற்படுகின்றனர். அத்துடன், இந்த வழக்கில் பொலிஸார் திட்டமிட்ட வகையிலும், அல்லது முறையற்ற விசாரணைகள் காரணமாகவும் நீண்ட தாமதங்களை ஏற்படுத்துகின்றனர். பொலிஸாரின் செயற்பாட்டில் இந்த நீதிமன்றம் திருப்தியடையவில்லை.

தமக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமையவே தாம் சிறுமிக்கு மருந்து ஏற்றினோம் என்று பொலிஸாரின் விசாரணையிலும், திறந்த நீதிமன்றத்திலும் தாதியர்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளனர். அத்துடன், சிறுமிக்கான சிகிச்சைக் குறிப்பில் மருந்தைச் செலுத்த வேண்டிய அளவீடுகள் குறிக்கப்படவில்லை என்றே நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் காண்பிக்கின்றன. ஆதலால், பொலிஸாரின் முன்பின் முரணான செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆரம்பத்தில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்படும் என்று தெரிவித்த பொலிஸார், பின்னர் அதற்கு அவசியம் இல்லை என்றனர். மருத்துவர்களைக் கைது செய்வதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது என்றுவிட்டு, தற்போது அவர்களைச் சந்தேகநபர்களாகப் பெயரிட வேண்டிய தேவை இல்லை என்கின்றனர். நீதி கிடைக்கும் என்று நம்பியே மக்கள் நீதிமன்றத்துக்கு வருகின்றனர். ஆனால், பொலிஸாரின் செயற்பாடு மக்களுக்கு அநீதியை வெளிப்படுத்துகின்றது. எனவே, வடமாகாண பிரதிப்பொலிஸ் மா அதிபரின் தலைமையில் இந்த விடயத்தில் முறையான விசாரணைகள் இடம்பெற வேண்டும். இந்த வழக்குத் தொடர்பான குறிப்புகள் பொலிஸ்மா அதிபரின் விசேட அவதானத்துக்காக அனுப்பப்பட வேண்டும். தேவையேற்படின் இந்த வழக்கை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு பாரப்படுத்த வேண்டிய நிலை ஏற்படலாம்' என்று நீதிபதி மன்றில் தெரிவித்தார்.

இந்த வழக்கில் தாதியர்களின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சயந்தன், 'யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்கு முன்னர், இரு தனியார் மருத்துவமனைகளில் அந்தச் சிறுமி சிகிச்சை பெற்றுள்ளார். அது தொடர்பில் முழுமையான விசாரணைகள் இடம்பெற வேண்டும். அத்துடன், இந்த வழக்கை குடியியல் சட்டக்கோவையின் கீழ் அணுகுவதா அல்லது குற்றவியல் சட்டக் கோவையின் கீழ் அணுகுவதா என்று பொலிஸார் இன்னமும் முடிவு செய்யவில்லை' என்று தனது சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

பாதிக்கப்பட்ட சிறுமியின் சார்பில் சட்டத்தரணிகள் [illegible] மற்றும் அபி தன் ஆகியோருடன் சட்டத்தரணி எஸ்.கே.புரந்தரனும், சந்தேகநபர்களான தாதியர்கள் சார்பில் சட்டத்தரணி கே.சயந்தனும் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர். (அ-ம-26)

## கல்வி...

தரம் 6 பாடத்திட்டங்களை மறுசீரமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், பல்வேறு சர்ச்சைகளைத் தொடர்ந்து தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளன. இதையடுத்து, நிபுணர் குழுவொன்றை அமைத்து, அவர்களின் பரிந்துரைக்கு அமைய இந்த நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு பிரதமர் ஹரிணி அமரசூரிய நடவடிக்கை எடுத்துள்ளார். அந்தக் குழுவிலேயே, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜாவும் இடம்பெற்றுள்ளார்.

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி விவகாரங்கள் சபைத் தலைவர் பேராசிரியர் பிரியங்கனி சேனநாயக்க தலைமையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் தலைவர் கலாநிதி உபாலி மாம்பிட்டிய, கொழும்புப் பல்கலைக்கழக சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளரான பேராசிரியர் மொஹமட் மஹீஸ் மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ரஞ்சித் பத்மசிறி ஆகியோரை உள்ளடக்கி இந்தக் குழு செயற்படவுள்ளது.

இந்தக்குழுவின் முதலாவது அமர்வு பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி, தேசிய கல்வி நிறுவகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ-ம-26)

## யாழ்.பல்கலையின்...

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் பதிவாளர் வி.காண்டீபன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் உள்ளதாவது:-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 40 ஆவது பொதுப் பட்டமளிப்பு பெப்ரவரி மாதம் 19, 20, 21, 22ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இதன்போது பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் பல்கலைக்கழக இலச்சினை பொறிக்கப்பட்ட கழுத்துமாலை, பட்டச்சான்றிதழ் சுருள் மற்றும் பல்கலைக்கழக இலச்சினை பொறிக்கப்பட்ட பரிசுப் பொருள்கள் என்பன தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களால் விற்பனை செய்யப்படுவதாகப் பல்கலைக்கழக நிர்வாகம் அறிகிறது. இது சட்டப்படி குற்றச்செயலாகும். இத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளும் நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-ம-26-66)

## தலைவர்...

வல்வெட்டித்துறை நகரசபையின் மாதாந்த அமர்வு, தவிசாளர் சிவாஜிலிங்கம் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போது, தலைவர் பிரபாகரனின் இல்லம் அமைந்திருந்த காணியில் புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு, காணியின் உரிமையாளரான பிரபாகரனின் சகோதரி ம.ஜெகதீஸ்வரி முன்வைத்த கோரிக்கை தொடர்பில் ஆராயப்பட்டது. இதன்போதே, சபை மேற்படி தீர்மானம் எடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் உறுப்பினர் மயூரன் கருத்துத் தெரிவிக்கையில், சம்பந்தப்பட்ட காணியின் உரிமையாளராக தலைவர் பிரபாகரனின் சகோதரி உள்ளார். எனினும், அந்தக் காணி 'பிரபாகரனின் காணி' என்றே அனைவராலும் அறியப்படுகின்றது. தலைவர் வாழ்ந்த வீடு இடித்து அகற்றப்பட்டாலும், அந்த வெற்றுக் காணியை 'பிரபாகரனின் இல்லம்' என்றே இன்றும் அழைக்கின்றனர். எனவே, அதன் பழைமை மாறாமல் நாங்கள் பாதுகாக்க வேண்டும்.

அங்கு புதிய கட்டுமானங்களை அமைக்கவிடாமல் தடுப்பதற்கு நகரசபைக்கு அதிகாரம் இல்லை. ஆனால், தார்மீக அடிப்படையில் புதிய கட்டுமானங்களை அமைப்பதைத்தவிர்க்குமாறும், அமைப்பதாயின் பிரபாகரனின் இல்லத்தை யொத்த கட்டுமானத்தை அமைக்குமாறும் ஆதனத்தின் உரிமையாளருக்கும், அற்றோனித்தத்துவக் காரருக்கும் கோரிக்கை விடுப்போம். அதை ஏற்பதும், மறுப்பதும் அவர்களின் கைகளில் உள்ளது - என்றார்.

இந்தக் கருத்து அனைவராலும் ஏற்கப்பட்டு, ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (அ-ம-26)

## கணக்காய்வாளர்...

களை அரசியலமைப்புப் பேரவை நிராகரித்திருந்தது. தற்போது புதிய பரிந்துரையை ஜனாதிபதி முன்மொழிந்துள்ளார். இவ்வாறான பின்னணியிலேயே அரசியலமைப்புப் பேரவை இன்று கூடுகின்றது. கணக்காய்வாளர் நாயகமாக பதவி வகித்த டபிள்யூ.பி.சீ.விக்ரமரத்ன கடந்த வருடம் ஏப்ரல் மாதம் ஓய்வுபெற்றார். அன்று முதல் இன்றுவரையில் புதிய கணக்காய்வாளர் நாயகம் தெரிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## அதிகாரி...


களப் போதனாசிரியர் கடந்த 28ஆம் திகதி தனது கடமைகளை முடித்து வீடு திரும்பிய வேளையில் தாக்குதலுக்கு உள்ளானார். அவர் உடனடியாக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுபின்னர்மேலதிகசிகிச்சைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சையின் பின் வீடு திரும்பியுள்ளார். இதையடுத்தே, இந்தத் தாக்குதலைக் கண்டித்து, பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. (அ-ச)

## சங்கானை...

தார். நேற்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்தின் பின்னர் அவர் தெரிவித்ததாவது:-

சுழிபுரத்தில் 30 வருடமாக நிலைகொண்டிருந்த இராணுவ முகாம் அகற்றப்பட்டு அந்தக் காணி உரிய தரப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சங்கனை கிழக்கு பகுதியிலும் இராணுவ முகாம் அமைந்திருக்கின்றது. அது தனியாரின் காணி. அந்தக் காணியையும் பொதுமக்களிடம் கையளிக்குமாறு நாங்கள் இராணுவத்திடம் கோரியுள்ளோம். இது தொடர்பில் சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முத்துக்குமாரசாமிக்கு யாழில் நினைவேந்தல்

கொழும்பு,ஜன.31

ஈழவிடுதலைப்போராட்டத்தின் முன்னோடி முத்துக்குமாரசாமி நினைவுகூரல் நிகழ்ச்சி திருநெல்வேலியில் ஆடியபாதம் வீதியில், திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையிலுள்ள இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நாளை ஞாயிறுக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கான அழைப்பை இந்து வாலிபர் சங்கத்தின் தலைவரும் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவருமான பொ. ஐங்கரநேசன், இந்து வாலிபர் சங்கத்தின் செயலாளர் யோ. சஜீதரா ஆகியோர் விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட முத்துக்குமாரசாமி, தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் தொடக்க காலத்தில் அளப்பரிய பங்களிப்பை வழங்கியவர்.

1975 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலை இயக்கம் உருவான போது அதன் தலைவராக இருந்து வழிநடத்தியவர்.

பல ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்த இவர், பின்னர் அமெரிக்கா சென்று சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பாளராகவும், உலகளாவிய அகதிகள் முகாம்களின் இயக்குநராகவும் பணியாற்றித் தமிழினத்தின் குரலை உலகரங்கில் ஓங்கி ஒலிக்கச் செய்தவராவார். (ச)



பெண் வேலையாள் தேவை

பருத்தித்துறை அல்வாய் வடமேற்கில் வீட்டு வேலை பார்ப்பதற்கு தங்கி நின்று வேலை பார்க்க கூடிய பெண் வேலையாள் தேவை.
(சம்பளம்- 30,000 + பேசித்தீர்மானிக்கலாம்)
தொடர்புகளுக்கு:
077 078 4411, 077 659 3951
(CS/60599) J-1

# பௌத்த சாசனத்தைக் காக்க அரசை விரட்ட வேண்டுமாம்!

*மதத்தை வைத்து வீரசேகர அரசியல்*

கொழும்பு, ஜன.31

பௌத்த சாசனம் மீது விமர்சனக் கணை தொடுக்கும் இந்த அரசாங்கத்தை விரட்டியடிக்கவேண்டும். அதற்குரிய நடவடிக்கையை நாம் முன்னெடுக்க வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது-

எனது நாட்டில் சாசனம் மற்றும் வளங்களைப் பாதுகாக்கவேண்டுமெனில் ஒற்றையாட்சியைப் பாதுகாக்கவேண்டும்.

ஒற்றையாட்சி பாதுகாக்கப்படும் என்ற உத்தரவாதத்தை வழங்கி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஒரேயொரு ஜனாதிபதி வேட்பாளர் என்றால் அது நாமல் ராஜபக்சதான்.

தமக்குரிய வாக்கு குறையும் எனத் தெரிந்தும் அவர் அந்த அறிவிப்பை விடுத்தார். அப்படியான ஒருவர் ஜனாதிபதியானால்தான் இந்த நாட்டைப், பாதுகாக்கமுடியும்.

பௌத்த பிக்குகளுக்குரிய கௌரவம்மீளக்கிடைக்கும் - என்றார். (எ-44)

# ஒஸ்மானியாக் கல்லூரியில் சமாதானக் கண்காட்சி

*யாழ்ப்பாணம், ஜன.31*

*தமிழ், முஸ்லிம் மற்றும் மலையக சமூகத்தினரின் வாழ்வியல் கலாசாரம் சமூக உணர்வுகளைப் பிரதிபலிக்கும் 'அபேதம்' சமாதானக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.*

*யாழ்ப்பாணம் சமூகசார் அமைப்புகள் மற்றும் வடமாகாண இளைஞர், யுவதிகள் சமாதானத்துக்கான எதிர்காலத் திட்டக்குழுவின் ஒழுங்கமைப்பில் இந்தக் கண்காட்சி இடம் பெறவுள்ளது. (ச-159)*

# பால் பொங்கும் மகிழ் நிகழ்வு

*யாழ்ப்பாணம்,ஜன.31*

*கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையத்தின் ஏற்பாட்டில் 'பால் பொங்கும் மகிழ் நிகழ்வு' பூதர்மடம் ஒழுங்கை, நீர்வேலித் தெற்கில் உள்ள கருவி நிறுவனத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும். கருவி நிறுவனத்தின் தலைவர் கணபதி சர்வானந்தா தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக கருவி நிறுவனம் இணைச்செயலாளர் கே.ஆர். சிவகுமார், சிறப்பு விருந்தினர்களாக திருமதி மனோவதனா கனகசூரியம், அப்புத்துரை சண்முகநாதன் ஆகியோர் கலந்துகொள்வர். (க)*

# மணவாளக்கோலமும் சங்காபிஷேகமும்

யாழ்ப்பாணம்,ஜன.31

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர்பெருமான் மற்றும் பழனி ஆண்டவர் ஆலயத்தின் மணவாளக்கோலத் திருவிழா இன்று சனிக்கிழமை இடம் பெறவுள்ளது.

காலை 8 மணிக்கு 108 சங்காபிஷேகத்துடன் பூசைகள் ஆரம்பமாகி, மாலை 6.30மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று சுவாமி முத்துச்சப்பறத்தில் வீதி வலம் வருதல் இடம்பெறும்.(க-17)

# ஏடு தொடக்கல்

யாழ்ப்பாணம்,ஜன.31

தைப்பூச நன்னாளான நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தில் ஆதீனமுதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகளால் சிறார்களுக்கு ஏடு தொடக்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

தங்கள் பிள்ளைகளுக்கு ஏடு தொடக்க விரும்புவோர் ஆதீன அலுவலகத்தின் 0772220103 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு சிவகுரு ஆதீன முதல்வர் தெரிவித்துள்ளார். (ச-66)

# முழுமதி கருத்தாடல்

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ்.பொதுசன நூலக வாசகர் வட்டத்தினரால் முழுமதிக் கருத்தாடல் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுத் தொடர் நிகழ்வாக நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் முதல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு பொதுநூலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் 'நவீன நோக்கில் ஈழத்து இலக்கியங்களின் மாற்றப்பாதை' என்ற தலைப்பில் நிகழ்வு இடம் பெறும்.

நிகழ்வில் இலக்கிய ஆர்வலர்கள் வாசகர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பங்குபற்றி பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-159)

# புதிய பயங்கரவாதச்சட்டம் கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம்,ஜன.31

சக வாழ்வுக்கான யாழ்ப்பாணம் மக்கள் ஒன்றியம் நடத்தும் 'அரசை பயங்கரவாதத்தில் இருந்து பாதுகாக்கும் சட்டம்' தொடர்பான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சென். ஜோன்ஸ் த பப்டிஸ்ட் தேவாலயத்தின் பரிஸ் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கலந்துரையாடலில் பேச்சாளர்களாக சட்டத்தரணி ஐ.குகதாசன், சட்டத் தரணியும் ஓய்வுபெற்ற நீதிபதியுமான ஜோய் மகிழ் மகாதேவன், செயற்பாட்டாளர் சி.திருநாவுக்கரசு தொழிற்சங்கவாதி சுவஸ்திகா அருலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.